Kampong Kapor Methodist Church
(Bishop Bickley Memorial)

*ஜூலை 23, 2025*
*வாக்குறுதி கடிதம் 2025*

*"நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான். " ~ மத்தேயு 25: 21, 23*

*கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே மற்றும் தேவனுடைய சக ஊழியர்களே,*

*நம்முடைய பிதாவாகிய தேவனாலும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.*

*"நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே." இந்த வார்த்தைகளை இயேசு உங்களுக்கும் எனக்கும் சொல்லியிருப்பதைக் கேட்பது எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும்! இந்த வார்த்தைகள் இயேசு தம்முடைய சீஷர்களுக்கு "கடைசி காலங்கள்" என்று அழைக்கப்படும் ஒரு காலத்தைப் பற்றி கற்பிக்கவும் எச்சரிக்கவும் சொன்ன ஒரு உவமையிலிருந்து வருகிறது. (மத்தேயு 24:3). இந்த உவமை பொதுவாக தாலந்துகளின் உவமை என்று அழைக்கப்படுகிறது.*

*(மத்தேயு 25:14-30) அந்த உவமையின் மூலம், கடவுள் நம்மிடம் ஒப்படைத்துள்ள வாழ்க்கை மற்றும் வளங்களின் நல்ல நிர்வாகிகளாக இருப்பதன் மூலம் "கடைசி காலங்களுக்கு" தயாராக இருக்குமாறு இயேசு தம்முடைய சீடர்களை ஊக்குவிக்கிறார் –*
*அவற்றை உண்மையாகவும், அன்பாகவும், மனப்பூர்வமான செயல்பாட்டின் மூலம் தேவனின் காரியங்களையும் நோக்கங்களையும் செயல்களையும் நிறைவேற்ற பயன்படுத்த வேண்டும்.*

*இந்த கூற்று, தேவன் நமக்கு கொடுத்திருக்கக்கூடிய எல்லா வளங்களையும் குறிக்கும், இதனுள் நமது நேரம் பெலன் தாலந்துகள் எல்லாம் அடங்கும். சந்தேகத்துக்கிடமின்றி உடனடியாக நமக்கு இருக்கும் பணத்தை கையாளும் நல்ல உக்கிரககாணர்களாகஇருக்க வேண்டும்.*

*நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் செல்வத்தையும் பணத்தையும் தேவனுடைய ராஜ்யத்தை முன்னேற்றுவதற்காகப் பயன்படுத்துகிறோமா, அல்லது நம்முடைய பாதுகாப்புக்காக பத்திரப்படுத்திக் கொள்கிறோமா?*

*முன் சொல்லப்பட்டதை செய்ய நாம் உண்மையுள்ளவர்களாக இருக்கும்போது, "இறுதியில்" நம்முடைய கர்த்தராகிய இயேசுவிடமிருந்து: " "நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே. உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்ற இந்த வார்த்தைகளைக் கேட்கும்போது, என்ன ஒரு மகிழ்ச்சி, ஆமென்!*

*இந்த வருடமும் நமது திருச்சபையில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும், ஆராதனையில் பங்குகொள்பவர்களும் நமது நிதி வாக்குறுதியை தேவனிடம் கொடுப்பதற்க்கான நேரத்தை நாம் நெருங்கி வருகிறோம். வருடா வருடம் நாம் மேற்கொள்ளும் இந்த வழக்கம் மிகவும் முக்கியமானது. நம்முடைய ஆவிக்குரிய ஒழுங்கினையும் சிந்தையை புதுப்பித்து, நாம் பெற்று இருக்கிற எல்லா நன்மைகளும் தேவன் நமக்கு தந்தது என்பதையும் அவருக்கு நம் சிறந்ததை திரும்பத் தர வேண்டும்*

*என்ற ஞானத்தை நமக்கு தருகிறது. வாக்குறுதி அளிப்பது என்பது நமது மீதமானதை அல்ல, நமது முதல் பங்கை கர்த்தருக்குக் கொடுக்க முடிவு செய்து உறுதியளிப்பது ஆகும். மேலும் நமது சொந்த காரியங்களைவிட, தேவனின் ராஜ்யத்தை முதலில் தேடுவதாகும்.*

*நாம் தேவனுக்கு கொடுக்கும் தசமபாகங்களும் வாக்குறுதியின் காணிக்கைகளும் நமது ஆலயத்தின் தொடர்ச்சியான ஊழியத்திற்கும், சுவிசேஷத்தின் நற்செய்தியை அறிவிக்கவும், தேவனுடைய ராஜ்யத்தை கட்டி எழுப்பும் சீடர்களை உருவாக்குவதற்கும் பயன்படும்.*

*வரும் ஆண்டுகளில், தலைமுறைகளுக்கு இடையேயான திருச்சபை என்ற நமது அடையாளத்தை வலுப்படுத்துவதிலும், நமது இளைய தலைமுறையினரை கட்டியெழுப்புவதிலும் அதிக கவனம் செலுத்துவோம். உள்ளூர் மற்றும் வெளிநாட்டு மிஷன்களின் பணிக்காக மிஷனரிகளை அனுப்புவதும் ஆதரிப்பதும், சமூகங்களை மாற்றுவதற்கும் ஆத்துமாக்களின் இரட்சிப்புக்கும் கடவுளின் பணியில் பங்கேற்பதை நமது திருச்சபையின் ஒரு முக்கியமான முயற்சியாகத் தொடருகிறோம். 5 அப்பம் 2 மீன்கள் திட்டம்,  அன்புடன் காலை உணவு மற்றும் கம்போங்கில் கிறிஸ்துமஸ் மூலம் மக்கள் கூடி வந்து, கிறிஸ்துவின் நற்செய்தியை அறிந்துகொள்ளதின் மூலமாகவும் நமது அண்டை வீட்டாரை நாம் தொடர்ந்து ஆசீர்வதிப்போம்.இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை  நடைபெறும் OIKOS முகாமை ஜூன் 2026 -ல் நாம் எதிர்நோக்குகிறோம். மேலும் நமது ஆலயத்தின் பழமையின் காரணமாக பழுது பார்க்கும் மற்றும் புதுப்பித்தல் வேலைகளையும் செய்ய இருக்கிறோம்.*

*விசுவாசத்தினால், நமது திருச்சபையின் ஊழியங்கள் மற்றும் பணிகளை ஆதரிப்பதற்காக, FY25/26 பட்ஜெட் செலவினமான $3.6 மில்லியனை சபைத் தலைவர்கள் அங்கீகரித்துள்ளனர். FY25/26க்கான பட்ஜெட் ஒதுக்கீட்டை இந்தக் கடிதத்தின் 3 பக்கத்தில் காணலாம். அதிகரித்து வரும் செலவுகளின் சவாலை நாம் தொடர்ந்து எதிர்கொள்கிறோம். செலவுகளை நிர்வகிப்பதற்கான வழிகளை நாம் தொடர்ந்து கண்டுபிடித்தாலும், கடந்த சில ஆண்டுகளில் நமது வருமானத்தைவிட நமது செலவுகள் வேகமாக அதிகரித்து வருகின்றன. கர்த்தர் அனுமதித்தபடி, நமது திருச்சபையின் பணியை ஆதரிக்க வரும் ஆண்டில் அதிகமாகக் கொடுக்க வேண்டியதை குறித்து நீங்கள் பரிசீலிப்பீர்களா?*

*ஜூலை 27, 2025 அன்று நாம் வாக்குறுதி ஞாயிற்றுக்கிழமையைக் கடைப்பிடிப்போம். வாக்குறுதி கொடுப்பதற்கான ஒரு நல்ல வழிகாட்டியாக தசமபாகத்தை (அதாவது உங்கள் வருமானத்தில் 10%) நீங்கள் கருத்தில் கொள்ளலாம். மேலும், கடவுள் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் வருடத்தில் ஆசீர்வதிக்கும் போதெல்லாம், அவருடைய திருச்சபையின் பணிக்காக இறைவனுக்கு ஒரு காணிக்கையாக அதிகமாகக் கொடுப்பதை ஜெபத்துடன் பரிசீலிக்கவும். நீங்கள் ஜெபத்துடன் கொடுப்பதாக வாக்குறுதி எடுக்கும்போது, தயவுசெய்து உங்கள் பூர்த்தி செய்யப்பட்ட வாக்குறுதி அட்டையை ஆலய அலுவலகத்திற்குத் திருப்பி அனுப்பவும் அல்லது www.kkmc.org.sg/give இல் உள்ள ஆன்லைன் படிவத்தை ஆகஸ்ட் 31, 2025 க்குள் நிரப்பவும்.*

*ஆண்டவர் நமக்குக் கொடுத்தது போல, நாம் பெற்ற வாழ்க்கை மற்றும் வளங்களுக்கு உண்மையுள்ள உக்கிராணக்காரர்களாக இருப்போம், மேலும்  நமக்கு இயன்றபடி கொடுப்போம். நாம் வாக்குறுதி அளித்து கொடுக்கும்போது, ஒவ்வொரு தசமபாகத்தையும் காணிக்கையையும் அவருடைய நோக்கத்திற்கும் மகிமைக்கும் நல்ல பலனளிக்கும் வகையில் வழிநடத்த ஒரு திருச்சபைக் குடும்பமாக நமக்கு ஞானம், விசுவாசம், உண்மைத்தன்மை மற்றும் புதுமை ஆகியவற்றைக் கொடுக்க கர்த்தரிடம் ஜெபிப்போம். ஆகவே, "நல்லது, நல்ல, உண்மையுள்ள ஊழியக்காரனே. உன் எஜமானின் மகிழ்ச்சியில் பிரவேசி" என்று நமக்குச் சொல்லப்படும் இந்த வார்த்தைகளைக் கேட்கும் நாளில் நாம் மகிழ்ச்சியடைவோம்.*

*நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியின் ஐக்கியமும் உங்களுடனேகூட இருப்பதாக.*

*ஒன்றாக கட்டி எழுப்புவோம்!*

*Rev. Poh Zhi-Hui*
*Rev. போ ஷீ-ஹூய்*
*தலைமைப் போதகர்*

*Mr Benjamin Quek*
*திரு .பெஞ்சமின் குவெக்*
*LCEC தலைவர்*

*Mr Adrian Chan*
*திரு .அட்ரியன் சான்*
*நிதிக் குழுத் தலைவர்*

**காணிக்கை கொடுக்கும் முறைகள்**

நமது வாக்குறுதி படிவங்களை நிரப்பி, நமது காணிக்கைகளை பின்வரும் வழிகளில் வழங்கலாம்:

*a)* **ஆராதனைகளில் காணிக்கை செலுத்தும் போது வாக்குறுதி/காணிக்கைகளை காணிக்கைப் பைகளில் போடுவதன் மூலம் நேரில் வழங்கலாம்.**
குறிப்பிட்ட காரணங்களுக்காக வாக்குறுதி அல்லது நன்கொடை வழங்க விரும்புவோர், தயவுசெய்து அதற்கான தொகையை ஒரு வாக்குறுதிஉறையில் ( ஆலயத்தின் நுழைவாயிலில் அல்லது வரவேற்பாளர் களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்) வைத்து, தேவையான தகவல்களைக் குறிப்பிடவும்.

*b)* **ஆலய வங்கி கணக்கிற்கு இணைய வங்கி மூலமா**
கம்போங் கபோர் மெதடிஸ்ட் தேவாலயத்தின் OCBC கணக்கிற்கு — "Kampong Kapor Methodist Church "; வங்கி குறியீடு/கிளை குறியீடு: 7339 / 695 — A/c எண்: 695457721001; மேலும் 'குறிப்பு' இடத்தில், உங்கள் பெயர் மற்றும் நிதி பரிமாற்றத்தின் நோக்கத்தைக் குறிப்பிடவும் (எ.கா. P- வாக்குறுதிகள், O- காணிக்கைகள், D-நன்கொடைகள் போன்றவை)

*c)* **ஆலய வங்கி கணக்கிற்கு Paynow மூலமா**
KKMC இன் UEN: S87CC0537K, மற்றும் திருச்சபையின் பெயர் 'Kampong Kapor Methodist Church' தோன்றும். "-Remarks" இன் கீழ் உங்கள் பெயர் மற்றும் நிதி பரிமாற்றத்தின் நோக்கத்தைக் குறிப்பிடவும் (எ.கா. P- வாக்குறுதிகள், O- காணிக்கைகள், D-நன்கொடைகள் போன்றவை)

*d)* **காசோலை மூலமாக**
குறுக்கு காசோலையாக (crossed cheque) Kampong Kapor Methodist Church என குறிப்பிட்டு 1 Kampong Kapor Rd, Singapore 208673 என்ற முகவரிக்கு மற்றும் காசோலையின் பின்புறத்தில், உங்கள் பெயர், தொலைபேசி எண் மற்றும் பணம் செலுத்தியதன் நோக்கம் (எ.கா. P-வாக்குறுதிகள், O- காணிக்கைகள், D-நன்கொடைகள் போன்றவை) ஆகியவற்றைக் குறிப்பிட்டு அனுப்பவும்.

